27th April 1959]

(இ) எந்த மாதத்திலே, இத்தொகையானது ஹரிஜன மாணவர் களுக்கும மாணவிகளுககும் வழங்கப்பட்டன ?

THE HON. SRI P. KAKKAN : (a) A sum of Rs. 5,95,500 was allotted for grant of scholarships for Scheduled Castes under the Grant-in-aid schemes during 1958–59, of which the Central grant would be Rs. 2,97,750.

(b) The Government of India have released in the form of 'Ways and means' advances three-fourths of the allotment of Central Assistance for all the Plan schemes including the assistance for these schemes in nine monthly instalments commencing from the month of May 1958. The releases were made automatically on or about the 15th of each month and the last instalment was received on the 15th January 1959. The balance will be adjusted by the Accountant-General on receipt of final payment sanction from the Government of India during March 1959.

(c) A sum of Rs. 2,70,500 was spent up to 30th September 1958 by the Director of Harijan Welfare and Rs. 1,00,000 was distributed to the Collectors by the Director of Harijan Welfare. A sum of Rs. 25,000 was allotted to the Collector of Kanyakumari in November 1958. An additional sum of Rs. 2 lakhs sanctioned during March 1959, was spent during the month.

SRI P. G. MANICKAM : ஜூலை மாதத்திலே ஹரிஜன மாணவ மாணவிகள் விண்ணப்பித்துக் கொள்கிறார்கள். ஆனால் அவர்களுக்குக் கிடைப்பதற்கு வருஷக் கடைசி கூட ஆகிவிடுகிறது. ஆகவே இந்தத் தொகையை முன்னதாக ஆகஸ்ட்டு, செப்டம்பர் மாதங்களிலேயே அனுப்பு வதற்கு நமது சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ? அப்படி ஏதாவது சென்னை சர்க்காரிலிருந்து மத்திய சர்க்காருக்கு கோரிக்கை போயிருக்கிறதா? அதற்குக் கிடைத்த பதில் என்ன ?

THE HON. SRI P. KAKKAN : நானே எழுதி இருக்கிறேன். ஹரிஜன மந்திரி மகாநாட்டுக்குப் போயிருந்தபோதும் இவைப்பற்றி வற்புறுத்தி யிருக்கிறேன். சமீபத்தில் டைரெக்டர் ஒரு மாகாநாட்டுக்குப் போயிருந்த போதும் கூட இதை வற்புறுத்தியிருக்கிறார். ஆகவே இதை கவனித்து ஒரு நடவடிக்கை எடுப்பதாக மத்திய அரசாங்கத்தாரும் சொல்லியிருக்கி றார்கள்.

Co-operative Weavers' Societies in Paramakudi taluk

* 177 *Q.*—SRI K. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the number of co-operative weavers' societies in Paramakudi taluk, Ramanathapuram district;

(b) the number of active looms working in such societies,

(c) whether there is any proposal to construct houses for weavers at Paramakudi town; and

(d) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Five societies.

(*b*) Seven hundred and ninety-one active looms.

(*c*) No, Sir.

(*d*) Does not arise.

Sri K. RAMACHANDRAN : இந்த மாதிரியாக அவர்கள் நல்ல முறையில் வேலை செய்துகொண்டு வரும்போது, இன்னும் பல செண்டர்கள் ரிஜிஸ்டர் செய்து கொள்ளவேண்டுமென்று சென்ற வருஷத்திலேயே கோரப்பட்டபோதிலும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருக்கிறது. அதையும் துரிதப்படுத்தி, கிட்டத்தட்ட ஐயாயிரம் லூம்கள் வரையில் இருப்பதானுல் வீடுகள் கட்ட இடம் வாங்க சில சொஸைடிகள் எற்படுத்துவதற்கும் அரசாங்கம் முயற்ச்சி எடுக்குமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : இதற்கு முன்பு ஒரு கேள்விக்குப் பதில் சொல்லுகிறபோது ராமநாதபுரத்தில் லூம்கள் சரியான நபர்மேல் ரிஜிஸ்டர் செய்யப்படவில்லை என்று சொன்னேன். அது ஒரு காரணமாக இருக்கலாம், சொஸைடிகள் ஆரம்பிப்பதற்கு காலதாமதம் ஆவதற்கு அடுத்த வருஷத்தில் 1959–60 வருஷத்திற்கு கைத்தறி நெசவுக்காக ஒதுக்கப்பட்ட தொகை 92 லட்சம் ரூபாய் அதில் 72 லட்சம் ரூபாய்க்குமேல் ரிபேட்டாகவே போய்விடுகிறது. ஆகவே இவ்வாண்டு புதிதாக வீடு கட்டும் திட்டம் ஒன்றும் எடுத்துக்கொள்வதற்கில்லை. அடுத்த வருஷத்தில் கவனிக்கலாம்.

Spices and oil-yielding plants

* 178 *Q*.—Sri K. SATTANATHA KARAYALAR : Will the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any scheme to increase the production of valuable spices and essential oil plants in the State; and

(*b*) the regions and the areas where they are grown?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) There are no separate Developmental Schemes for increasing the production of spices and essential oil yielding plants in the State. There is however one Research Scheme for the improvement of clove, nutmeg and also cocoa functioning at the Kallar and Burliar Fruit Stations. A scheme for cultivation of medicinal plants in Government Chinchona Plantations and a scheme for carrying out research on the cultivation and processing of essential oil yielding plants at the Research Centres established at Anamala in Coimbatore district and Naduvattam in the Nilgiris district are also being implemented.

Sri K. SATTANATHA KARAYALAR : இந்த எஸென்ஷியல் ஆயில் ப்ளான்ட் சம்பந்தப்பட்ட வரையில் வெளிநாட்டிலிருந்து சிக்கல்கள் இருப்பதனுல் இந்தத் திட்டத்தை தடையின்றி நடத்த ஐ.ஸி.ஏ.ஆர். உதவி பெற்று இதைச் செய்ய முன்வருவார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : ஐ.ஸி.ஏ.ஆர். உதவி பெற்றுதான் செய்யப்படுகிறது. மேற்கொண்டு ஆராய்ச்சி செய்து சர்க்கார் எதைச் செய்யவேண்டும் என்று தீர்மானிக்கும்.